தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.09.2013**

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 79.01 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,279 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,560 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 15.16 டி.எம்.சி.

## கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நாளை செம்மறி ஆடு வளர்ப்புப் பயிற்சி

திருவண்ணாமலையில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இம் மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 27) செம்மறி ஆடு வளர்ப்பு பற்றிய பயிற்சி முகாம் நடைபெறுகிறது.இம் முகாமில் பங்கேற்று பயன்பெற விரும்பும் விவசாயிகள், திருவண்ணாமலை, நெ.52, ஸ்ரீராம நகர், பச்சையம்மன் கோயில் தெருவில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்துக்கு நேரில் வந்து முன் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04175-253077 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஆராய்ச்சி மையத்தின் தலைவர் த.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை சரிவு

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வாழைத்தார்களின் விலை சரிவடைந்தது. இதனால், வாழைத்தார் பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் ஏராளமான ஏக்கரில் வாழைத்தார் பயிர் செய்துள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் ஏலச் சந்தைக்கும், கூட்டுறவு விற்பனை மையத்திற்கும் கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகின்றன. கூட்டுறவு விற்பனை மையத்தில் வெள்ளிக்கிழமை மட்டும் ஏலம் நடைபெறுவதால் விவசாயிகள் அதிக அளவில் தினசரி வாழைத்தார் ஏலச் சந்தைக்கு வாழைத்தார்களை கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.500-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.350-க்கும், கற்பூரவள்ளி வழைத்தார் ரூ.350-க்கும், பச்சைலாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், மொந்தன் வாழைத்தார் காய் ஒன்று ரூ.4-க்கும் விற்பனையாயின.

புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.300-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.250-க்கும், பச்சைலாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6-க்கும் விற்பனையாயின.

தற்பொழுது விஷேச காலங்கள் ஏதும் இல்லாதாதல் வாழைத்தார்களின் விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மழையின்றி வாடும் நிலக்கடலைப் பயிர்கள்

குமாரபாளையம், அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிர்கள் போதுமான மழையின்றி வாடுகின்றன. இதனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

குமாரபாளையம், பல்லக்காபாளையம், காடச்சநல்லூர், மக்கிரிபாளையம், படைவீடு, மேட்டுக்கடை, அருவங்காடு, வெப்படை, செப்தாபுரம் உள்பட பல்வேறு பகுதிகளில் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் அதிகளவில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளனர்.

வைகாசி, கார்த்திகைப் பட்டங்கள் நிலக்கடலை விதைப்புக்கு ஏற்றப் பருவங்கள். அவ்வப்போது பெய்த மழையை நம்பி 500-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் மானாவாரி நிலங்களில் குமாரபாளையம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உழுது நிலக்கடலை விதைப்பில் ஈடுபட்டனர். இதன் பின்னர் போதுமான மழையின்றி வாடிய நிலக்கடலைச் செடிகள், மீண்டும் பெய்த மழையால் உயிர் பிழைத்தன. தற்போது நிலக்கடலைச் செடிகளில் பூக்கள் பிடித்து, காய்கள் வைக்கும் தருணம். கடந்த இரு வாரங்களுகக்கு முன்னர் பெய்த மழையால் செழித்து வளர்ந்து பசுமையாகக் காட்சியளித்த மானாவாரி நிலக்கடலைப் பயிர்கள், காய்கள் பிடிக்கும் இந்த வேளையில் போதுமான மழையின்றி வாடுகின்றன.

மழையை எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகள், கண் முன்பே வாடும் நிலக்கடலைப் பயிர்களைக் காக்க வழியின்றி வேதனையில் உள்ளனர். போதுமான மழை பெய்து, நல்ல

விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகள் மத்தியில் தற்போது ஏமாற்றமே நிலவுகிறது.

கடந்த இரு ஆண்டுகளாக கடும் வறட்சியில் விவசாயம் பொய்த்து, குடிநீருக்கே தவித்து வந்த நிலையில், வானம் பார்த்த பூமியில் தற்போது சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலையாவது கை கொடுக்குமா, கரை சேர்க்குமா என மழையை எதிர்பார்த்து வருகின்றனர் விவசாயிகள்.

## காஞ்சீபுரத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரி ஆர்ப்பாட்டம்

காஞ்சீபுரம்,

பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் மாநிலப் பொருளாளர் சங்கர் தலைமை வகித்தார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். சாலையில் பாலை ஊற்றி அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். பால் உற்பத்தியாளர்களுக்கு பால் லிட்டருக்கு ரூ.25–ஆகவும், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.35 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். நபார்டு மானியத்துடன் கறவை மாட்டுக்கு கடன் வழங்குவதாக ஆவின் பால் சங்கங்களிடம் பட்டியல் பெற்று 3 மாதங்களாகியும் இதுவரை வழங்கவில்லை. எனவே உடனடியாக கடன் வழங்க வேண்டும். 50 சதவீத மானிய விலையில் ஆவின் மாட்டுத்தீவனம் வழங்கிட வேண்டும். பால் உற்பத்தி மானியமாக லிட்டருக்கு ரூ.4 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாநில பொது செயலர் முகம்மது அலி, மாவட்ட துணைச்செயலர் சங்கர், தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்ட செயலர் லாரன்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறுவனர் : டி. வி. ராமசுப்பையர்

## நாட்டின் உர மானிய செலவினம் ரூ.70 ஆயிரம் கோடியாக உயரும்



புதுடில்லி:நடப்பு 2013 – 14ம் நிதியாண்டில், மத்திய அரசின் உர மானியச் செலவினம்,65 ஆயிரம் கோடி முதல், 70 ஆயிரம் கோடி ரூபாய் வரையில் இருக்கும் என, தரக்குறியீட்டு நிறுவனமான, இக்ரா தெரிவித்து உள்ளது. நடப்பு நிதியாண்டிற்கான, பட்ஜெட் அறிவிப்பின் போது, உர மானியச் செலவினம்,66 ஆயிரம்கோடி ரூபாயாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டிருந்தது. முந்தைய ஆண்டிற்கு,36 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் நிலுவையில் உள்ளது. உரிய காலத்தில், மானியத் தொகை வழங்கப்படாத நிலையில், நடப்பு நிதியாண்டிலும், நிலுவை ஏற்படும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உர மானிய தொகை வழங்கப்படாத நிலையில், அது இத்துறை நிறுவனங் களின், வருவாயையும், லாப வரம்பையும் பாதிப்படையச் செய்யும். நடப்பு ஆண்டில், பருவமழை பொழிவு நன்கு உள்ளதால், நாட்டின் வேளாண் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, உரத்துக்கான தேவை அதிகரிக்கும். நடப்பு நிதியாண்டில், பாஸ்பேட், பொட்டாஷ் மற்றும் டை அம்மோ னியம் பாஸ்பேட் ஆகிய உர வகைகளுக்கான மானியச் செலவு, 29 ஆயிரம் முதல்,30 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் நிலையாக இருக்கும். யூரியா உரத்திற்கான மானியச் செலவினம், 36 ஆயிரம் முதல் 40 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும். சர்வதேச சந்தையில் யூரியாவின் விலை குறைந்துள்ளது என்றாலும், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பின் சரிவால், அதற்கான பலன் கிடைக்காமல் போய்விடும் என, இக்ரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நாட்டின் நெல் உற்பத்தி :9.23 கோடி டன்னாக குறையும்



புதுடில்லி:நாட்டின் நெல் உற்பத்தி, நடப்பு 2013 – 14ம் ஆண்டின், கரீப் பருவத்தில், 9.23 கோடி டன்னாக சரிவடையும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே பருவத்தில், 9.27 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது என, வேளாண் துறை ஆணையர் ஜே.எஸ். சாந்து தெரிவித்தார்.அதேசமயம், மதிப்பீட்டு பருவத்தில், நாட்டின் ஒட்டு மொத்த உணவு தானிய உற்பத்தி, 12.82 கோடி டன்னிலிருந்து, 12.93 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.மழை பற்றாக்குறையால், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில், நெல் உற்பத்தி குறையும் என, கணக்கிடப்பட்டு உள்ளது. நடப்பாண்டின் கரீப் பருவத்தில், மக்காச்சோளம் உற்பத்தி, 1.77 கோடி டன்னாக அதிகரிக்கும் என, கணக்கிடப்பட்டு உள்ளது. இது, கடந்தாண்டின் இதே பருவத்தில், 1.60 கோடி டன்னாக இருந்தது. மேலும், பருப்பு வகைகள் உற்பத்தியும், 59.10 லட்சம் டன்னிலிருந்து, 60.10 லட்சம் டன்னாக உயரும் என, சாந்து மேலும் தெரிவித்தார்.

## தீவிர நெல் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபாடு...அதிகரிப்பு! மாவட்டத்தில் முன்னோடியாக மீஞ்சூர் ஒன்றியம்

பொன்னேரி:மாவட்டத்தில், மீஞ்சூர் ஒன்றியத்தில், அதிக அளவில் தீவிர நெல் சாகுபடி திட்டத்தின் மூலம், விவசாயிகள் நெல் பயிரிட்டு உள்ளனர். கடந்த ஆண்டை விட, 5000

ஏக்கர் கூடுதலாக நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில், 84 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது. மின்வெட்டு, உரத் தட்டுப்பாடு, குறைந்து வரும் நிலத்தடி நீர், வேலை ஆட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளில், விவசாயிகள் தவித்து வந்தனர். இப்பிரச்னைகளில்இருந்து, விவசாயிகள் மீண்டுவர, குறைந்த மூலதனத்தில் கூடுதல் லாபம் பெறுவதற்காக, வேளாண்மை துறை ஆராய்ச்சி நிறுவனத்தால், கடந்த, ஐந்து ஆண்டுகளுக்கு முன், புதிய தொழில்நுட்பத்தில் நெல் சாகுபடி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வரப்பிரசாதம் குறைந்த விதை நெல், குறைந்த பணியாளர்கள், குறைந்த நீர் ஆதாரம் ஆகியவற்றை கொண்டு, அதிக மகசூலை பெற, வேளாண்மை துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது, தீவிர நெல் சாகுபடி திட்டம். இது, செம்மை நெல் சாகுபடி, திருந்திய நெல் சாகுபடி திட்டம் என்றும் கூறப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்ட முடியும் என, நிரூபித்தும் காட்டியது. ஆரம்பத்தில், இந்த புதிய தொழில்நுட்பத்திற்கு விவசாயிகளிடையே வரவேற்பு இல்லை. அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்த, விதை நெல் மற்றும் உரம், மார்க்கர், கோனோவீட்டர் உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை வேளான்துறை இலவசமாக வழங்கியது. முன்னோடியாக... பயிரிடும் முறை குறித்து, வேளாண்மை துறை விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை தீர்த்து வைத்தது. தீவிர நெல் சாகுபடி திட்டத்தின் மூலம், நெல் பயிரிட்டவர்கள், கூடுதல் மகசூல் பெற்றனர். நேர்த்தியான நடவு முறை, சீரான இடைவெளி இருப்பதால் களைப்பணி மேற்கொள்வது சுலபமாக உள்ளது. அதனால், களைப்பணியும் சுலபமாக, விவசாயிகளிடையே இதற்கு வரவேற்பு அதிகரித்தது. குறைந்த செலவினங்களால், அதிக மகசூல் மற்றும் லாபம் கிடைக்கிறது என்பதை அறிந்த விவசாயிகள், தீவிர நெல் சாகுபடி திட்டத்தில் ஈடுபட துவங்கினர். ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில், மீஞ்சூர் ஒன்றித்தில் தான், அதிக அளவில் தீவிர நெல் சாகுபடி மூலம், விவசாயிகள் நெல் பயிரிட்டு வருகின்றனர். மீஞ்சூர் ஒன்றியத்தில், கடந்த ஆண்டு, 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், திருந்திய நெல் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது, சம்பா பருவத்திற்கு, 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நடவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். புதியதாக இத்திட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் மதிப்புள்ள விவசாய ஈடுபொருட்கள், வேளாண்மை துறையால் இலவசமாக வழங்கப்படுகிறது. மாவட்டத்தின் மற்ற ஒன்றிங்களில், சராசரியாக 5000 ஏக்கர் பரப்ப-

ளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு, இத்திட்டத்தினை தீவிரப்படுத்த, மாவட்ட வேளாண்மை துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மீஞ்சூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் ரேவதி கூறுகையில், 'மீஞ்சூர் ஒன்றியத்தில், கடந்த ஆண்டு, 40 சதவீத விவசாயிகள், தீவிர நெல் சாகுபடி திட்டம் மூலம் நெல் பயிரிட்டனர். இந்த ஆண்டு, 20 சதவீதம் அதிகரித்து உள்ளது. அடுத்த ஆண்டு, 100 சதவீத விவசாயிகளையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர, திட்டமிட்டு உள்ளோம்' என்றார். விவசாய தேவைகள் சாதாரண முறை சாகுபடி திருந்திய நெல் சாகுபடி ஒரு ஏக்கருக்கு விதை நெல் 40 கிலோ 10 கிலோ பணியாளர்கள் (நடவுக்கு) 13 பேர் 13 பேர் பணியாளர்கள் (களைக்கு) 10 பேர் 2பேர்(இயந்திரம் மூலம்) நாற்று இடைவெளி 10 க்கு 10 செ.மீ., 22.5க்கு 22.5 செ.மீ.,நாற்றுக்கள் நான்கு முதல், ஆறு வரை அதிகபட்சம் மூன்று மகசூல் 25 முதல், 30 மூட்டை 42 முதல், 45 மூட்டை நீர்ஆதாரம் அதிகம் குறைவு செலவு ரூ.15 ஆயிரம் முதல், ரூ.12 ஆயிரம் முதல் 18 ஆயிரம் ரூ.14 ஆயிரம்

### பெங்களூருவிற்கு வெண்டை ஏற்றுமதி

விழுப்புரம்:கண்டமானடி பகுதியில் சாகுபடி செய்யும் வெண்டை பெங்களூரு பகுதிக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. விழுப்புரம் அடுத்த கண்டமானடி, அத்தியூர் திருவாதி, வேலியம்பாக்கம் பகுதியில் 35 ஏக்கர் பரப்பளவில் வெண்டை சாகுபடியை விவசாயிகள் செய்துள்ளனர். மூன்று மாதங்களில் அறுவடைக்கு தயாராகும் வெண்டைக்கு குறைந்த தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு ஏக்கரில் 3 கிலோ சாகுபடி செய்யும் வெண்டைக்கு விவசாயிக்கு 3 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவாகிறது. இப்பகுதி களில் சாகுபடி செய்யும் வெண்டை உள்ளூருக்கு மட்டுமின்றி பெங்களூரு 7 டன், சென்னை 4 டன், சேலம், கோவை பகுதிகளுக்கு 5 டன்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நிலத்தில் போடும் முதலுக்கு சராசரியாக லாபத்தை ஈட்டி தரும் வெண்டை சாகுபடியில் இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.

### திருக்கோவிலூரில் நெல் விலை வீழ்ச்சி

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் நெல் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்ததால் நெல் விளைச்சல் வெகுவாக குறைந்தது. இதனால் நெல் விலையில் ஏற்றம் காணப்பட்டது.

திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் கடந்த ஆண்டு அறுவடை சீசனில் 70 கிலோ மூட்டை, பொன்னி 1,900 ரூபாய் வரையிலும் விலை போனது. ஏ.டி.டி., 39 உள்ளிட்ட சன்னரகம் 1,250 ரூபாய் வரை விற்றது. நெல் வரத்து குறைந்த போதும் நெல் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை சிறப்பாக இருக்கிறது. விளைச்சல் அதிகரிக்கக் கூடும் என்பதால், மொத்த வியாபாரிகள் இருப்பு வைத்திருக்கும் நெல்லை அரிசியாக்கி விற்க ஆர்வம் காட்டி வருவதால் கொள்முதலை நிறுத்தியுள்ளனர். இதுவே நெல் விலை குறைந்ததற்கு காரணமாக கூறப்படுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை அதிகம் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் நெல் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் அரிசி விலை குறையாமல் அதே நிலையில் உள்ளது. நேற்று திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் பொன்னி நெல் ஒரு மூட்டை 1,400 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 39 உள்ளிட்ட ரகங்கள் சராசரியாக 1,100 ரூபாய்க்கும் விலை போனது.

## குமாரபாளையம் பகுதியில் 5,000 ஏக்கரில் நெல் சாகுபடி

குமாரபாளையம்: மேட்டூர் கிழக்கு வாய்க்காலில், தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், இப்பகுதியில், 5,000 ஏக்கரில் நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தின் காவிரி கரையோரத்தில், நெல் சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்படும். கடந்த, இரண்டு ஆண்டுகளாக, பருவமழை பொய்த்தால், நெல் சாகுபடி குறைந்தது. மக்கள் குடிப்பதற்கே தண்ணீருக்கு கஷ்டபட்ட நிலையில், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. கடந்த ஆகஸ்ட் மாதம் பெய்த பருவ மழையில், காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதிகரித்தது. அதனால், பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. காவிரியில் தண்ணீர் செல்வதால், கரையோர விவசாயிகள், நெல் சாகுபடி செய்ய, நாற்றுகளை நடவு செய்து வருகின்றனர். குமாரபாளையம் அடுத்த மேட்டூர் கிழக்குகரை வாய்க்காலில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், அப்பகுதி விவசாயிகள் நெல் நடவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். வேளாண் துறை அதிகாரிகளும், திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதால், விவசாயிகளும் திருந்திய நெல் சாகுபடியை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். "இப்பகுதியில், 5,000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது' என, வேளாண் அதிகாரி ஒருவர் கூறினார்.

### சீத்தா பழம் விளைச்சல் அதிகரிப்பு: விலை வீழ்ச்சியால் வியாபாரிகள் கலக்கம்

கிருஷ்ணகிரி: சீத்தா பழம் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், குத்தகை வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்ட மொத்த பரப்பில், இரண்டு லட்சத்து, 2,409 ஹெக்டேரில் வனப்பகுதிகள் அமைந்துள்ளது. இதனை ஒட்டியுள்ள நிலப்பகுதிகளில், அதிக அளவில் தோட்டக்கலை பணப்பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் மாவட்டத்தில் அமைந்திருக்கும் சிறு மலைக்குன்று பகுதியில் அதிக அளவில் 'அன்னோனா சுமோசா' என்ற தாவரவியல் பெயர் கொண்ட சீதா பழங்கள் பயிரிடப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, ஜெகதேவி, போச்சம்பள்ளி, தொகரப்பள்ளி, ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை மற்றும் ஆந்திர மாநில எல்லைபகுதியான வேப்பனப்பள்ளி, மகாராஜகடை ஆகிய பகுதிகளில் உள்ள நீர் வடிநில மலைப்பகுதியில் அதிக அளவில் சீதா பழ கன்றுகள் நடப்பட்டு குத்தகை முறையில் அறுவடை செய்யப்படுகிறது. இதில் குறிப்பாக ஜெகதேவி, வேலம்பட்டி மற்றும் ஆந்திர மாநில எல்லையான குருங்காட்டு மலை, நவத்தா மலை, கன்னியாநேரி மலை, ஜோக்குபள்ளம் மலை, ராஜன் மலை ஆகிய பகுதிகளில், 7,000 ஏக்கரில் சீத்தா பழம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் ஜூன் துவக்கத்தில் இருந்து செப்டம்பர் இறுதி வரை சீத்தா பழ உற்பத்தி அமோகமாக இருக்கும். இதனால் சீசனில் கிருஷ்ணகிரி, ஜெகதேவி, மகாராஜகடை ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி, 10 டன் சீத்தா பழங்கள் மும்பைக்கு விற்பனைக்கு செல்லும். மேலும், ஆகஸ்டு மாதங்களில் பெங்களூர், மும்பை, சென்னை மார்க்கெட்டிற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து செல்லும் சீத்தா பழங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். கடந்த ஆண்டு மாவட்டத்தில் தென் மேற்கு பருவ மழை பொய்த்து போனதால் சீத்தா பழங்களின் பருமன் சிறுத்து மார்க்கெட்டில் வரவேற்பு குறைந்து போனது. மேலும், பெரும்பாலான மரங்களில் பிஞ்சுகள் விட்டு பெருக்கும் வேளையிலேயே காய்கள் காய்ந்து போனது. இதனால் ஒரு மரத்தில் இருந்து, 30 சதவீத பழங்கள் மட்டுமே அறுவடையானது. இதனால் குத்தகை வியாபாரிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் போதிய மழை பெய்த காரணத்தால் சீதா பழ மரங்களில் நன்கு பூ பூத்து காய்கள் அதிக அளவில் விட்டு தற்போது அறுவடை செய்யப்பட்டு பழங்கள் வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆகஸ்ட் மாதத்தில் மும்பை மற்றும் பெங்களூர் மார்க்கெட்டில், கிருஷ்ணகிரி பகுதி சீத்தா பழத்திற்கு டன்னுக்கு, 4,000 ரூபாய் முதல், 5,000 ரூபாய் வரையில் விலை கிடைத்து

வந்தது. தற்போது விளைச்சல் அதிகரிப்பாலும் உள்ளூர் மார்க்கெட்டிலும், வெளி மார்க்கெட்டிலும் சீதா பழத்துக்கு போதிய வரவேற்பு இல்லாத நிலையில், ஒரு டன் சீதா பழத்தை, 1,000 ரூபாயுக்கு விற்பனை செய்து வருகிறார்கள். உள்ளூர் மார்க்கெட்டில், 20 பழங்கள் 5 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை வீழ்ச்சியால் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த சீதா பழ குத்தகை வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.

### தீவிரமடையும் நெல் நடவு பணிகள்கூலி ஆட்கள் பற்றாக்குறையால் திணறல்

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள எல்.பி.பி., பாசனத்தில் நெல் நடவு பணி தீவிரமாக நடக்கிறது. கூலி ஆட்கள் பற்றாக்குறையால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட பகுதியாக கோபி மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால் மூலம் பயன்பெறும் பாசன பகுதிகள் என சுமார், 2.5 லட்சம் ஏக்கரில் விவசாய பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகிறது. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயறு வகைகள் என ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து எல்.பி.பி., பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கோபி சுற்று வட்டாரத்தில் கோபிபாளையம், கோட்டுபுள்ளாம்பாளையம், கலிங்கியம், வேட்டைகாரன் கோவில், குள்ளம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நெல் நடவு பணி தீவிரமாக நடக்கிறது. நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் பனியன் கம்பெனிகள் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விவசாய கூலி ஆட்கள் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. கூலி ஆட்கள் தட்டுபாடு காரணமாக, நெல் நடவு செய்ய, ஏக்கருக்கு, 500 ரூபாய் வரை கூலி உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்களுக்கு, 300 ரூபாய், பெண்களுக்கு, 150 ரூபாய் வரை கூலி கொடுத்தும் ஆட்கள் கிடைக்கவில்லை. விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை, உழவு பணிக்கான செலவு அதிகரிப்பு போன்ற காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எல்.பி.பி., பாசன பகுதி விவசாயிகள் கூறியதாவது: சென்ற இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததன் காரணமாக நெல் நடவு பணியில் தொய்வு ஏற்பட்டது. நடப்பாண்டு நீலகிரி பகுதியில் பெய்த மழை காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 82 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்வு காரணமாக பாசனத்தில் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வறண்டு கிடந்த நிலத்தை மூன்று முறை உழவு செய்ய, இயந்திரங்களுக்கு வாடகையாக, 2600 ரூபாய் கூலி

கொடுக்கிறோம். நடவு பணி, களை எடுப்பு என ஏக்கருக்கு, 20,000 முதல், 25,000 ரூபாய் வரை செலவாகிறது. பனியன் கம்பெனி மற்றும் நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டம் காரணமாக விவசாய கூலி ஆட்கள் கிடைக்கவில்லை. பெண்களுக்கு தினசரி, 150 ரூபாய் முதல், 200 ரூபாய் கூலி கொடுத்தாலும் ஆட்கள் கிடைக்கவில்லை, என்றனர்.

### விவசாயிகள் சங்க பேரவை நிர்வாகிகள் ஆலோசனை

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டையில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் பட்டுக்கோட்டை, மதுக்கூர், திருவோணம், பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் ஒன்றிய பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. விவசாய சங்க மாவட்ட பொருளாளர் கோவிந்தசாமி தலைமை வகித்தா ர். ஒன்றிய தலைவர் சோமசுந்தரம், செயலாளர் பாலசுப்பிரமணியம் உள்பட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், விவசாய சங்க மாநில செயலாளர் சண்முகம் பேசுகையில், ""விவசாயிகளுக்கு உள்ள ஒதுக்கீடு நிதியுதவிகளை குறைத்துக்கொண்டதால் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை உள்ளது. விவசாயிகள் போர்வையில், பெரிய நிறுவன உரிமையாளர்கள், பொதுத்துறை வங்கிகள் மூலம் கடன் பெற்று வேறு தொழிற்துறைகளுக்கு பயன்படுத்துகின்றனர். இந்தியாவில், சிறப்பு பொருளாதார மண்டலம் 550 இடங்களில் உள்ளது. இதில், 55 இடங்கள் ஆந்திராவில் இருக்கிறது. இதனால், இரண்டு கோடி மக்கள் தங்கள் வசிப்பிடத்தை விட்டு வெளியேறும் அவலம் ஏற்பட்டுள்ளது," என்றார். தொடர்ந்து, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பேசுகையில், ""ரிசர்வ் வங்கி புதிய கொள்கை முடிவெடுத்துள்ளது. அதன்படி, ஊரகப்புறங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளை மூடிவிட்டு, மாவட்ட அளவில் மட்டு மே வங்கிகள் இருந்தால் போதுமான து என தீர்மானித்து கிராம வளர்ச்சி யை தடுக்க முயற்சிக்கிறது," என்றார்.

### இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு முகாம்

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை விவசாய பயிற்சி, ஆராய்ச்சி மையத்தில் இயற்கை சீற்றத்தை தாங்கி வளரும் பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. இதில், நபார்டு உழவர்மன்ற விவசாயிகள் பங்கேற்றனர். கருத்தரங்கு கூட்டத்தில், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிசங்கர் தலைமை வகித்து பேசுகையில், ""இயற்கை வேளாண்மைக்கு

விவசாயிகள் மாற வேண்டும். நிலத்தின் பரப்புக்கு ஏற்ப, குறிப்பிட்ட நிலத்தில் இயற்கை விவசாயம் செய்ய வேண்டும். பின்னர், இடர்பாடுகளை அறிந்து, முழுமையான இயற்கை விவசாய முறையை பின்பற்ற வேண்டும். கிராமப்பொருளாதாரம் மேன்மையடைய விவசாய தொழில் உதவும். பால்பண்ணை அமைக்க கடனுதவி அளிக்கப்படும்," என்றார். இதைத்தொடர்ந்து, விவசாயிகளுக்கு பஞ்ச காவ்யா, மூலிகை பூச்சி விரட்டி உள்ளிட்டவை இலவசமாக வழங்கப்பட்டது. கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் பேசுகையில், ""விளைநிலங்களை தரிசாக விடக்கூடாது. நெல் விவசாயி தான் முதன்மை விவசாயியாக விளங்குவார். இன்றைக்கு இளம்தலைமுறையினர் விவசாயத்துறையில் இறங்குவது ஆரோக்கியமானது. பாரம்பரிய நெல் சாகுபடி முறையால் இயற்கை சீற்ற பாதிப்பில் இருந்து தப்பிக்க முடியும்," என்றார். இதில், உழவர் மன்ற பொறுப்பாளர்கள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்று, பயன்பெற்றனர்.

## நத்தம் தொகுதியில் மழையில்லை தேங்காய் உற்பத்தி குறைவு

நத்தம் தொகுதியில் மழையின்றி வறட்சிகாரணமாக தேங்காய் உற்பத்திக் குறைந்துள்ளது.நத்தம்,சாணார்பட்டி ஒன்றியங்களில் விவசாய விளைப்பொருள்களுக்கு அடுத்தாற்போல்15 ஆயிரம் ஏக்கர் வரை மா, தென்னை சாகு படிசெய்யப்பட்டுள்ளது கடந்த இரண்டாக மழையின்றி வறட்சியால் தென்னை மரங்கள் பட்டுப் போனதால், தேங்காய் உற்பத்திக் குறைந்து மட்டைகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், மட்டைகள் கிடைக்காமல் பல கயிர் பிரிக்கும் ஆலைகளில் நார் உற்பத்தி குறைந்து கைமிஷின் கயிர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## விவசாய பயிர்களின் பதிவு அவசியம்

வேடசந்தூர் : விவசாயிகள் தாங்கள் செய்த விவசாய பயிர் பற்றிய கணக்கை கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் கணக்கில் வரவு வைத்தால் மட்டுமே அரசின் உதவிகள் கிடைக்கும்.விவசாயிகள் பயிர்செய்வதை, வருவாய்துறையினர் கிராம நிர்வாக அலுவலர் மூலம் கணக்கு எடுக்கின்றனர். விவசாயதுறை அதிகாரிகளும் தனியாக கணக்கெடுக்கின்றனர். கிராம நிர்வாக அலுவலர்கள் தோட்டங்களுக்கு சென்று விவசாயிகள் பயிரிட்டுள்ள பயிர்கள் குறித்து அதிகாரிகள் ஒவ்வொரு புலமாக சென்று ஒவ்வொரு கோடையிலும் என்ன பயிரை விவசாயிகள் செய்துள்ளனர் என கண்டறிந்து அடங்கல் கணக்கில் வரவு வைத்தனர். இந்த முறையில் பயிர் பற்றிய சரியான கணக்கு

இருந்தது.வேலைபளுவின் காரணமாக முறையாக இந்த கணக்கு பராமரிக்கப்படவில்லை. ஏனொ தானோவென கணக்கு எடுக்கப்படுகிறது. முறையாக கணக்கு இல்லாததால் அரசு தற்போது வழங்கிய வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு முழுமையாக போய் சேரவில்லை. பயிர் செய்தும் கிராம கணக்கில் இல்லாததால் பல விவசாயிகள் உதவித்தொகையை பெற முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது தென்னை மர கணக்குகளையும் அதிகாரிகள் அடங்கல் கணக்கை வைத்து எடுத்து வருகின்றனர். முறையான பதிவு இல்லாத விவசாயிகளுக்கு இது கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது.எனவே விவசாயிகள் தாங்கள் செய்துள்ள பயிர் பற்றிய கணக்கை கிராம நிர்வாக அலுவலகம் சென்று அடங்கலில் பதிவு செய்வது அவசியம். அப்போதுதான் விவசாயிகள் அரசு அளிக்கும் நிவாரணங்களை பெற முடியும் என அதிகாரிகள் கூறுகின்றனர். விவசாயி பாலகிருஷ்ணன் கூறியதாவது,எனது நிலத்தில் சோளம் மற்றும் கடலை பயிர் செய்திருந்தேன். வறட்சி நிவாரணம் வழங்கும் போது எனக்கு வரவில்லை. அதிகாரிகளிடம் கேட்டபோது என்னுடைய பெயர் கணக்கில் இல்லை என்று கூறிவிட்டனர். கிராம கணக்கில் இருந்திருந்தால் எனக்கு உதவித்தொகை கிடைத்திருக்கும்,"என்றார்.

### தினமும் 6 டன் காய்கறிகள் கூட்டுறவு மையம் மூலம் கொள்முதல்

திண்டுக்கல் : வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் சத்திரப்பட்டியிலிருந்து, சென்னையிலுள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு தினமும் 6 டன் காய்கறிகள் அனுப்பப்படுகிறது.சென்னை மாநகராட்சி பகுதிகளில் பண்ணை பசுமை காய்கறிகடைகள் அரசு மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த கடைகளுக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் விவாசாயிகளிடம் காய்கறிகளை வாங்கி அனுப்பப்பட்டு வருகிறது.சத்திரப்பட்டியிலிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக காய்கறிகள் கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் மையத்தை கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். கூட்டுறவு சங்க இணைபதிவாளர் செல்வகுமரன் உடன் இருந்தார். கலெக்டர் கூறியதாவது: சத்திரப்பட்டி மையத்தில் இருந்து தினமும் ஆறு டன் காய்கறிகள் சென்னைக்கு அனுப்பபடுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் இடைத்தரகர்களின்றி பயன்பெறுவர். இதன் மூலம் அவர்களுக்கு பணம், நேரம் மிச்சமாகிறது. விவசாயிகள் ஒன்று சேர்ந்து தங்கள் பகுதியிலும் காய்கறிகள் கொள்முதல்

மையம் திறக்க கோரிக்கைவிடுத்தால் பரிசீலிக்கப்படும், என்றார். விவசாயி திருஞானம் கூறியதாவது: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு சத்திரப்பட்டி பகுதியில் இருந்து காய்கறிகளை கொண்டுசென்றுகொண்டிருந்தோம். தற்போது கூட்டுறவு சங்கத்திலேயே காய்கறிகளை வாங்குவதால் எங்களுக்கு போக்குவரத்து செலவு மிச்சமாகிறது.இதோடு மட்டுமல்லாது, மார்க்கெட்டிற்குள் நுழைய சுங்க வசூல், வியாபாரிகளுக்கு தரவேண்டிய 10 சதவீத கமிஷன் ஆகியவையும் மிச்சமாகிறது, என்றார்.

## சுரைக்காய் கிலோ ரூ.2 க்கு விற்பனை

திண்டுக்கல்: சுரைக்காய் ஒரு கிலோ ரூ.2 க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடந்த வாரம் சுரைக்காய், சில்ரைவிற்பனையில் கிலோ ரூ.8 வரை விற்பனையானது. இது படிப்படியாக குறைந்து இந்த வாரம் விலை மிகவும் குறைந்து காணப்பட்டது. தற்போது மொத்த மார்க்கெட்டில் கிலோ ரூ.2 க்கு விற்கப்படுகிறது. இதிலும் குறைந்து கிலோ ரூ.1 க்கு சில மொத்த வியாபாரிகள் வாங்குகின்றனர். இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயி முத்துச்சாமி கூறுகையில்,""சுரைக்காய் விலை இந்த அளவு குறைந்து விற்கும் என எதிர்பார்க்கவில்லை. தண்ணீர் பாய்ச்சி பராமரித்து வந்தது, மார்க்கெட்டிற்கு கொண்டுவரும் போக்குவரத்து செலவு என்று கணக்கிட்டால், சுரைக்காயை செடியிலேயே விட்டுவிடலாம் என்ற நிலை உள்ளது. இருந்தபோதும் காய்கறி வீணாவது மனசுக்கு கஷ்டமாக இருக்கும் என்பதால், சுரைக்காயில் வருவாயை எதிர்பார்க்காமல் பிற காய்கறிகள் கொண்டுவரும் போது அதையும் சேர்த்து விற்பனைக்கு கொண்டுவருகிறோம்," என்றார்

## 175 ஏக்கரில் ஒட்டு ரக பப்பாளி சாகுபடி செய்ய திட்டம் துணை இயக்குனர் தகவல்

சிவகங்கை : ""மாவட்ட அளவில், ஒட்டு ரக பப்பாளியை 175 ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளதாக," தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில், தற்போது நாட்டுரக பப்பாளி சாகுபடி செய்யப்படுகிறது. இதில், ஆண், பெண் மர பிரச்னையால், விளைச்சல் இல்லாமல் போய்விடும். எனவே, மாவட்டத்தின் மண்வளம் மற்றும் தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ப உயர் விளைச்சல் பப்பாளி ரகத்தினை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம், எக்டேருக்கு ரூ.24 ஆயிரத்து

650 வழங்கப்படும். இத்திட்டபடி, விவசாயிகளுக்கு வழங்க, "ரெட்லேடி' வீரிய ஒட்டு உயர் விளைச்சல் ரக பப்பாளி விதைகள் பெறப்பட்டு, தேவகோட்டை, நேமம் பண்ணைகளில் குழித்தட்டு முறையில், நிழல்வலை கூடங்களில் உற்பத்தி செய்து, வழங்கப்படுகிறது. இக்கன்றுகளை 6க்கு 6அடி இடைவெளியில் நடவு செய்யலாம். தொழு உரம் 10 கிலோ, தழை, மணி, சாம்பல் சத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் 50 கிராம் வீதம் இடவேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியாவை மரத்திற்கு 20 கிராம் வீதம் இடவேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கு 100, இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்தில், சொட்டு நீர் பாசன கருவிகளும் வழங்கப்படும். இந்த ரக பப்பாளி மரத்தில் இருந்து தலா 180 கிலோ பப்பாளி பழங்கள் கிடைக்கும். விவசாயிகள் ஒட்டு ரக பப்பாளி மரக்கன்றுகள்குறித்த விபரங்களை, தோட்டக்கலை உதவி இயக்குனர்களிடம்கேட்டு பெறலாம், என்றார். உதவி இயக்குனர் வெங்கடேசன் உடனிருந்தார்.

## 4,580 கோழி பண்ணைகள் அரசு மானிய நிதி ஒதுக்கீடு

சிவகங்கை:""தமிழகத்தில்,2013-14ல் அரசு மானியத்தில், 4,580 கோழி பண்ணைகள் அமைக்க,'' நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், சுய தொழில் மூலம் பொருளாதாரத்தை வளர்த்து கொள்ளும் நோக்கில்,கோழிப்பண்ணை அமைத்துக்கொள்ள, அரசு மானியம் வழங்குகிறது. இதற்காக,4,080 நாட்டுக்கோழி, 500 பிராய்லர் கோழி பண்ணை என, 4,580 கோழி பண்ணை அமைக்க, அரசு கால்நடைத்துறைகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதற்கான,பயனாளிகள் தேர்வு நடக்கிறது. அரியலூர், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, நெல்லை, விழுப்புரம், விருதுநகர், வேலூர், தேனி, சிவகங்கை ஆகிய 10 மாவட்டங்களில், 500 "பிராய்லர்' கோழி பண்ணைகள் அமைக்கப்படும். இதில், பண்ணைக்கு தலா 5 ஆயிரம் கோழி குஞ்சுகள் இலவசம். தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கன்னியாகுமரி, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உட்பட 17 மாவட்டங்களில், 4,080 பண்ணைகள் அமைக்க, பண்ணைக்கு தலா 250 நாட்டுக்கோழி (அசில் வகை) குஞ்சுகள் இலவசம். பண்ணை அமைக்க முதற் கட்டமாக ரூ.22 ஆயிரத்து 937 மானியம். 2ம் கட்டமாக, 5,750 என, ஒட்டுமொத்தமாக, பண்ணைக்கு, ரூ.28 ஆயிரத்து 687 மானியமாக வழங்கப்படும். பண்ணைக்காக, நிலம் வாங்குதல், கொட்டகை அமைக்க, வங்கிகள் மூலம், கடன் பெறலாம். அதற்கும் மானியம் உண்டு. இதற்கான, மானிய நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக, கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இலவச சொட்டு நீர் பாசன அமைப்பு

திருச்சுழி : திருச்சுழி பகுதி சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, குறைந்த அளவு தண்ணீரை வைத்து, கோடை காலத்திலும் சாகுபடி செய்ய, தமிழக அரசின் இலவச சொட்டு நீர் பாசன அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. இதை பெற, சிறு மற்றும் குறு விவசாயி என்பதற்கான சான்று, ரேஷன் கார்டு ஜெராக்ஸ், போட்டோ 3, பட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நில வரை படம், மண் மற்றும் நீரின் தன்மை குறித்த பரிசோதனை அறிக்கை போன்றவைகளுடன்,விவசாயிகள், திருச்சுழி தோட்ட கலை உதவி இயக்குனரை அணுகலாம்.

தினகரன்

## நடப்பு ஆண்டில் காரி பருவத்தில் அரிசி உற்பத்தி 9.23 கோடி டன்னாக குறையும்



நடப்பு ஆண்டில் காரி பருவத்தில் அரிசி உற்பத்தி 9 கோடி 23 லட்சம் டன்னாக குறையும் என்றும் அதே சமயம் தொத்த தானியங்களின் உற்பத்தி அதிகரிக்கும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2013-ம் ஆண்டில் கேரளா, கர்நாடகா, டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் தென்மேற்கு பருவ மழை சிறப்பாக இருந்தது.

குறிப்பாக பீகார், அஸ்ஸாம், ஜார்கன் ஆகிய மாநிலங்களில் பலத்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனால் முந்தைய ஆண்டை காட்டிலும் நடப்பு ஆண்டு காரி பருவத்தில் நெல் விளைச்சல் குறைவாகவே இருக்கும் என்றும் கூறப்படுகிறது. எனவே நடப்பு ஆண்டு காரி பருவத்தில் அரிசி உற்பத்தி 9.23 கோடி டன் அளவிலேயே இருக்கும் என்றும் மத்திய வேளாண்துறை அமைச்சகம் கூறியுள்ளது. முந்தைய ஆண்டின் காரி பருவத்தில் அரிசி உற்பத்தி 9.28 கோடி டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலையில் நாட்டின் நெல் சாகுபடி பரப்பளவு 3.66 கோடி ஹெக்டேர் அளவில் இருந்து 3.75 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதர தானியங்கள் சாகுபடி நிலமும் 1.76 கோடி ஹெக்டேர் அளவில் இருந்து 1.95 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. மேலும், எண்ணெய் வித்துகள் சாகுபடி பரப்பளவு 1.93 கோடி ஹெக்டேராகவும், பருப்பு வகைகள் £குபடி பரப்பளவு 1.50 கோடி ஹெக்டேராகவும் அதிகரித்துள்ளது. இதே போன்ற காரணங்களால் நடப்பு ஆண்டில் தொத்த உணவு தானியங்களின் உற்பத்தி 12.93 கோடி டன்னாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்று வேளாண்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதேபோல் சோளம் பயிரின் விளைச்சல் 1.78 கோடி டன்னாக அதிகரிக்கும் என்றும் முந்தைய ஆண்டு இது 1.60 கோடி டன்னாக இருந்தது என்றும் வேளாண்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் முந்தைய ஆண்டில் 59 லட்சம் டன்னாக இருந்த அவரை, மொச்சை உள்ளிட்ட பயிர்களின் விளைச்சல் நடப்பு ஆண்டில் 60 லட்சம் டன்னாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பருத்தி சாகுபடி பரப்பு 1.14 கோடி ஹெக்டேராகவும், கரும்பு சாகுபடி பரப்பு 48.74 லட்சம் ஹெக்டேராகவும், சணல் மற்றும் மெஸ்தா சாகுபடி பரப்பு 8.34 லட்சம் ஹெக்டேராகவும் குறைந்துள்ளது என்றும் வேளாண்துறை அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## உழவர் சந்தையில் வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பயிற்சி

தர்மபுரி: வேலூர் வேளாண் மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் சசிகலா, சூர்யா, மணிமேகலா, புவனேஸ்வரி, தீபபாரதி, ரேஷ்மா முரளி ஆகியோர் தர்மபுரி உழவர் சந்தையை நேற்று பார்வையிட்டனர். அவர்களிடம் உற்பத்தியாளர்கள் உழவர் சந்தையில் தேவையான வசதிகள் இருப்பதாகவும், காய்கறிகளுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், துணை வேளாண் அலுவலர் தேவராஜன் மற்றும் உதவி வேளாண் அலுவலர் ரங்கநாதன், பழனி ஆகியோர் கல்லூரி

மாணவிகளுக்கு காய்கறி சாகுபடி, அறுவடை, தரம் பிரித்தல் குறித்து பயிற்சி அளித்தனர். இது குறித்து துணை வேளாண் அலுவலர் தேவராஜன் கூறுகை யில்,''புரட்டாசி மாதத்தையொட்டி உழவர் சந்தையில் காய்கறி வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தக்காளி, கத்தரி, வெண்டை, முள்ளங்கி, கேரட், உருளை கிழங்கு, பீன்ஸ், முட்டைகோஸ் வரத்து அதிகரித்துள்ளது. தர்மபுரி உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் காய்கறி வரத்து குறித்தும், விற்பனை குறித்தும் வேலூர் வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பயிற்சி அளித்தோம்,''என்றார்.

## மழைக்காலங்களில் பட்டுப்புழுவை தாக்கும் ஊசி 'ஈ'யை அழிக்க வேளாண்துறை நடவடிக்கை ஒட்டுண்ணி விநியோகம்

தர்மபுரி: மழைக்காலங்களில் பட்டுப்புழுக்களை தாக்கும் ஊசி 'ஈ' யை அழிக்க 'என் தைமஸ்' என்னும் ஒட்டுண்ணி பட்டு வளர்ச்சி துறை மூலம் வழங்கப்படுகிறது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் தர்மபுரி. இங்கு 80 சதவீதம் விவசாயம் சார்ந்த தொழில்கள் நடைபெற்று வருகிறது. பட்டுக்கூடு உற்பத்தியில் தர்மபுரி மாவட்டம் தன்னிகரற்று விளங்குகிறது. தர்மபுரி, காரிமங்கலம், பென்னாகரம், பாலக்கோடு, நல்லம்பள்ளி, அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இடங்களில் 2,500 ஏக்கரில் மல்பெரி செடி வளர்க்கப்படுகிறது. இதன் மூலம் பட்டுக்கூடு வளர்க்கப்படுகிறது. மழைக்காலங்களில் பட்டுக்கூடு வளர்ப்பு ஒரு சவாலாக உள்ளது. மழைக்கால பாதிப்பிலிருந்து தப்பிக்க சில விவசாயிகள் ஜப்பான் நாட்டின் 'சுழல் சந்திரிகை' தொழில்நுட்பத்தில் பட்டுக்கூடு வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். மழைக்காலத்தில் ஊசி 'ஈ' என்னும் ஈயானது பட்டுப்புழுக்களை தாக்கி பாதிப்பை ஏற்படுத்துகிறது. தற்போது ஊசி 'ஈ' தர்மபுரி உட்பட தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பட்டுப்புழுக்களை தாக்கி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தரமான பட்டுக்கூடு உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பட்டுவளர்ச்சி துறை அதிகாரிகள் கூறுகையில், "தர்மபுரி, கிருஷ்ணகிரி உட்பட பல மாவட்டங்களில் ஊசி 'ஈ' பட்டுப்புழுக்களை தாக்கி பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஊசி 'ஈ'யை கட்டுப்படுத்த பட்டுவளர்ச்சி துறை மூலம் 'என் தைமஸ்' என்னும் ஒட்டுண்ணிகள் வழங்குகிறோம். ரூ.40 விலையில் பாக்கெட் மூலம் 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ஒட்டுண்ணிகள் வழங்கப்படுகிறது,'' என்றனர்.

## வேளாண்மை கல்லூரி மாணவிகள் பார்த்தீனியம் செடி ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மேகலசின்னம்பள்ளியில் வேளா ண்மை கல்லூரி மாணவிகள் சார்பில் பார்த்தீனியம் செடி ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடையில் வேலூர் ஆதிபராசக்தி வேளாண் மற்றும் தோட்டக்கலை கல்லூரியில் பயிலும் மாணவிகள் குறளரசி, அல்போன்சா, அனுஸ்ரீமோகன், சந்திரலேகா, காயத்ரி, கலையரசி, மானசா, கோகிலா, பிரியங்கா ஆகியோர் முகாமிட்டு, சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சி அளித்து வருகின்றனர். அதன் ஒருகட்டமாக விஷச்செடியான பார்த்தீனியம் செடி ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை மேகலசின்னம்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடத்தினர். நிகழ்ச்சியின் போது, பார்த்தீனியம் என்ற களை செடி அன்னிய நாட்டிலிருந்து கடந்த 1950ம் ஆண்டு கோதுமை இறக்குமதி மூலம் இந்தியாவில் பரவியது. இதன் ஆயுட்காலம் மிகவும் குறுகிய நாள் என்றாலும் மிகவும் வேகமாக பரவக்கூடியது. எவ்வித சூழ்நிலையிலும் வளரக்கூடியது. ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள செடிகள் ஒரு லட்சத்து 54 ஆயிரம் விதைகளை உருவாக்கும். இச்செடியால் மனிதர்களுக்கு ஆஸ்துமா, இருமல், தோல் அரிப்பு, அலர்ஜி போன்ற நோய்கள் ஏற்படுகிறது. இதை ஒழிக்க கூட்டு முயற்சி தேவை என மாணவிகள் விளக்கினர். இதை தொடர்ந்து பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் பார்த்தீனியம் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய தட்டிகளை ஏந்தியும், கோஷங்கள் போட்டவாறும் மாணவர்கள் சென்றனர். பேரணி மேகலசின்னம்பள்ளி, கோதிகுட்டலப்பள்ளி உள்ளிட்ட கிராமங்கள் வழியாக சென்று பள்ளியை அடைந்தது.

## வரலாறு காணாத அளவில் வெண்பட்டுக்கூடு கிலோ ரூ521க்கு ஏலம் விவசாயிகள் மகிழ்ச்சி

சேலம்: சேலம், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிகளுக்கு வெண்பட்டுக்கூடுகளின் வரத்து குறைந்ததால், கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. வரலாறு காணாத அளவில் நேற்று முதன்முறையாக முதல் தர வெண்பட்டுக்கூடு ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ521க்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தமிழகத்தில் சேலம், தர்மபுரி, ஈரோடு,

விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கரூர், வேடசந்தூர், பழனி, காங்கேயம் உள்ளிட்ட பல பகுதிகளில் விவசாயிகள் வெண்பட்டுக் கூடுகளை அதிகளவில் உற்பத்தி செய்து வருகின்றனர். சேலம் மாவட்டத்தில் டி.பெருமாபாளையம், மன்னார்பாளையம், கொங்கணாபுரம், தலைவாசல், ஆத்தூர், மல்லூர் ஆகிய பகுதிகளிலும், நாமக்கல்லில் சேந்தமங்கலம், வெண்ணந்தூர், புதன்சந்தை ஆகிய பகுதிகளிலும், தர்மபுரியில் அரூர், பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஹள்ளி ஆகிய பகுதிகளிலும், கிருஷ்ணகிரியில் பர்கூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் வெண்பட்டுக்கூடு உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டுக் கூடுகளை விவசாயிகள் சேலம், தர்மபுரி, பாலக்கோடு, பென்னாகரம் உள்ளிட்ட இடங்களில் உள்ள பட்டுக்கூடு அங்காடிக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த சில நாட்களாக வெண்பட்டுக்கூடுகளின் வரத்து குறைந்ததால் சேலம், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிகளில் வெண்பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து சேலம், தர்மபுரி பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த கோடையில் மழை இல்லாததால் மல்பரி செடிகள் காய்ந்தன. இதனால் ஒருங்கிணைந்த சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வெண்பட்டுக்கூடு உற்பத்தி குறைந்தது. தற்போது பட்டுநூல் தேவை அதிகரித்துள்ளது. இதனால் வெண்பட்டுக்கூடுகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பட்டுக்கூடு அங்காடிகளில் வெண்பட்டுக்கூடுகளுக்கு வழக்கத்தை விட கிலோவுக்கு ஸி 100 முதல் முதல் ஸி150 வரை கூடுதல் விலை கிடைத்து வருகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல லாபம் பார்த்து வருகின்றனர். சேலம் பட்டுக்கூடு அங்காடியில் நேற்று மஞ்சள் பட்டுக்கூடு அதிகபட்சமாக ஸி352, குறைந்தபட்சம் ஸி285, சராசரியாக ஸி342 எனவும், வெண்பட்டுக்கூடு அதிகபட்சம் ஸி487, குறைந்தபட்சம் ஸி480, சராசரியாக ஸி484 என ஏலம் போனது. தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் மஞ்சள் பட்டுக்கூடு அதிகபட்சம் ஸி376, குறைந்தபட்சம் ஸி250, சராசரி ஸி342, வெண்பட்டுக்கூடு அதிகபட்சம் ஸி521, குறைந்தபட்சம் ஸி305, சராசரி ஸி422 என ஏலம் போனது. இதுவரை இந்த அளவுக்கு வெண்பட்டுக்கூடுகள் ஏலம் போனதில்லை. கிலோ ஸி521க்கு ஏலம் போனது இதுவே முதன்முறையாகும். இதனால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுள்ளனர். வெண்பட்டு க்கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால்,

விவசாயிகள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறினர்

## மழையின்மையால் வெங்காய உற்பத்தி குறைந்தது

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு மழை குறைந்ததால் வைகாசி பட்டத்தில் சின்ன வெங்காயம் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் வெளியூரில் இருந்து வெங்காயம் வாங்கி வந்து விற்பனை செய்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் அதகபாடி, ஆட்டுகாரம்பட்டி, பாலக்கோடு, புலிகரை, சோமனஅள்ளி ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. வைகாசி பட்டத்தில் பயிரிட்ட வெங்காயப்பயிருக்கு ஆனி, ஆடியில் போதிய மழை தர்மபுரி மாவட்டத்தில் பெய்யாததால் புரட்டாசி அறுவடையில் விளைச்சல் குறைந்துவிட்டது. இதனால் ஆட்டுக்காரம்பட்டி பகுதியில் மொத்த விற்பனையாளர்கள் திருச்சி, ராசிபுரம், உடுமலை, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயத்தை வாங்கி வந்து தரம் பிரித்து தர்மபுரி மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த சில நாட்களாக ராசிபுரம் மற்றும் திருச்சி பகுதியில் இருந்து சின்னவெங்காயத்தை விற்பனைக்காக வாங்கி வருகின்றனர். இதுபற்றி ஆட்டுகாரம்பட்டி வெங்காய மொத்த வியாபாரி மாது கூறும் போது, வைகாசி பட்டத்தில் விதைக்கப்பட்ட வெங்காய பயிருக்கு போதிய மழை பெய்யாததால் தர்மபுரி மாவட்டத்தில் விளைச்சல் பாதியாக குறைந்துவிட்டது. தற்போது திருச்சி பகுதியில் இருந்து சின்ன வெங்காயத்தை கிலோ ஸி30க்கு வாங்கி தரம் பிரிக்கிறோம். தரம் பிரிக்கப்பட்ட சின்ன வெங்காயத்தை உலர வைத்து கிலோ ஸி35 முதல் 40 வரை விற்பனை செய்கிறோம். சின்னவெங்காயத்தின் தேவை அதிகரிப்பால் தற்போதைக்கு விலை குறைய வாய்ப்பில்லை. கார்த்திகை பட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும், அதன் அறுவடை தை மாதத்தில் கிடைக்கும் போது தான் விலை குறையும். அதுவரை சின்ன வெங்காயத்தின் விலை குறையாது என கூறினார். தர்மபுரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் சில்லரை விலையில் ஸி60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் பெரிய வெங்காயம் ஸி45க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## விளைச்சல் குறைவால் சின்ன வெங்காயம் விலை அதிகரிப்பு 3 மாதத்திற்கு பின் விலை சரிய வாய்ப்பு

தர்மபுரி: கண்ணில் நீர் வரவழைக்கும் வெங்காயம் உணவில் முக்கிய இடம் பிடிக்கிறது. வெங்காயம் நாள் தோறும் சாம்பார், ஆம்லெட், தோசை, கூழ், பழைய சோறு, தயிர் பச்சடி, பிரியாணி, கீரை ரகங்கள் உள்ளிட்ட வடஇந்திய, தென்னிந்திய உணவிலும் இடம் பிடிக்கிறது. தற்போது தமிழகத்தில் விளைச்சல் குறைவால் வெங்காயத்தின் விலை கிலோ ஸி50 வரை அதிகரித்து விட்டது. இதனால் ஓட்டல்களில் வெங்காயம் பயன்படுத்துவதை குறைத்துவிட்டனர். தர்மபுரி மாவட்டத்தில் அதகபாடி, ஆட்டுகாரம்பட்டி, பாலக்கோடு, புலிகரை, சோமனஅள்ளி ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. வைகாசி பட்டத்தில் பயிரிட்ட வெங்காயப்பயிருக்கு ஆனி, ஆடியில் போதிய மழை தர்மபுரி மாவட்டத்தில் பெய்யாததால் புரட்டாசி அறுவடையில் விளைச்சல் குறைந்துவிட்டது. இதனால் ஆட்டுக்காரம்பட்டி பகுதியில் மொத்த விற்பனையாளர்கள் திருச்சி, ராசிபுரம், உடுமலை, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயத்தை வாங்கி வந்து தரம் பிரித்து தர்மபுரி மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த சில நாட்களாக ராசிபுரம் மற்றும் திருச்சி பகுதியில் இருந்து சின்னவெங்காயத்தை விற்பனைக்காக வாங்கி வருகின்றனர். இதுபற்றி ஆட்டுகாரம்பட்டி வெங்காய மொத்த வியாபாரி மாது கூறும் போது, வைகாசி பட்டத்தில் விதைக்கப்பட்ட வெங்காய பயிருக்கு போதிய மழை பெய்யாததால் தர்மபுரி மாவட்டத்தில் விளைச்சல் பாதியாக குறைந்துவிட்டது. தற்போது திருச்சி பகுதியில் இருந்து சின்ன வெங்காயத்தை கிலோ ஸி30க்கு வாங்கி தரம் பிரிக்கிறோம். தரம் பிரிக்கப்பட்ட சின்ன வெங்காயத்தை உலர வைத்து கிலோ ஸி35 முதல் 40 வரை விற்பனை செய்கிறோம். சின்னவெங்காயத்தின் தேவை அதிகரிப்பால் தற்போதைக்கு விலை குறைய வாய்ப்பில்லை. கார்த்திகை பட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும், அதன் அறுவடை தை மாதத்தில் கிடைக்கும் போது தான் விலை குறையும். அதுவரை சின்ன வெங்காயத்தின் விலை குறையாது என கூறினார். தர்மபுரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் சில்லரை விலையில் ஸி60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் பெரிய வெங்காயம் ஸி45க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## வரத்து சரிவால் விலை உயர்வு ரூ28 லட்சத்திற்கு தக்காளி விற்பனை கூடைரூ400 ஆக அதிகரிப்பு

ராயக்கோட்டை: ராயக்கோட்டையில் தக்காளி வரத்து சரிந்ததால் கூடை ரூ400 ஆக அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை பகுதியில் தக்காளி சாகுபடி பிரதானமாக உள்ளது. இங்குள்ள உள்ளுக்குறுக்கை, திம்சேபள்ளி, பாளையம், எடவனஅள்ளி, தொட்டதிம்மனஅள்ளி, நெல்லூர், லிங்கனம்பட்டி, சச்சலப்பட்டி, கொப்பகரை உட்பட 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளியை ராயக்கோட்டையில் உள்ள மண்டிகளுக்கு மொத்தமாக கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். சேலம், சென்னை, கோவை, திருச்சி, கர்நாடகம், ஆந்திரா மற்றும் புதுச்சேரியில் இருந்து வரும் வியாபாரிகள் தக்காளியை மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், ஆண்டு முழுவதும் ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டில் விற்பனை களை கட்டியவாறு காணப்படும். இந்நிலையில், நேற்று நடைபெற்ற ஏலத்தில் கிலோ தக்காளி ரூ16 ஆக விலை உயர்ந்தது. 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ஸி400க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆக மொத்தம் நேற்று ஒரேநாளில் 7,000 கூடை தக்காளி வரத்து காணப்பட்டது. 175 டன் தக்காளி ஸி28 லட்சத்திற்கு விற்பனையானது.
இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:
தொடர் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், தக்காளி உடைந்து அழுகி வருவதால் வரத்து சரிந்துள்ளது. விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் நாள்தோறும் 10,000 கூடை தக்காளி வரத்து காணப்பட்டது. இதனால், கிலோ 12 ரூபாய்க்கும், ஒரு கூடை 300 ரூபாய்க்கும் விற்பனையானது. தற்போது 7,000 கூடையாக சரிந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.